# குளுனி வித்யா நிகேதன் மேல்நிலைப்பள்ளி

## தமிழ் இலக்கிய மன்றம்

**2026-2027**

# தமிழ் இலக்கிய மன்றம்

## கூட்டறிக்கை (2026-2027)

*" எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ்*

*என்று சங்கே முழங்கு "*

தமிழ் இலக்கிய மன்றம் மாணவர்களின் மொழி மற்றும் இலக்கியத் திறனை வளர்க்கவும், உயர்த்தவும், மேம்படுத்தவும் வேண்டும் என்ற உயரிய உன்னத நோக்கத்தைக் கொண்டுள்ளது.

செம்மொழியாம் தமிழ் மொழியில் மிக்க ஆர்வமுள்ள மாணவர்கள் மன்ற உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தங்களது கருத்துக்கள் மற்றும் கற்பனைத் திறன்களைப் பல்வேறு இலக்கிய வடிவங்கள் மூலமாக சுதந்திரமாக வெளிப்படுத்தவும், ஊக்குவிக்கவும் தமிழ் இலக்கிய மன்றம் உற்றத் துணையாக விளங்கும்.

மன்றத்தின் முக்கிய நோக்கங்கள்:

* மாணவர்களின் மொழித்திறனையும், இலக்கிய திறனையும் மேம்படுத்துதல்.

* மாணவர்களை சிறந்த சொற்பொழிவாளராக எழுத்தாளராக ஊக்குவித்தல். மற்றும் அவர்களின் அறிவார்ந்த சுதந்திரமான சிந்தனைத் திறனை வெளிப்படுத்த செய்தல்.

*தன்னம்பிக்கை உணர்வைத் தூண்டுதல் என்பதாகும். தொடர்ந்து தமிழ் இலக்கிய மன்ற கூட்டத்தின் திட்டங்களைச் செயல்படுத்துவது குறித்து தீர்மானிக்கப்பட்டது. முதற்கட்ட நடவடிக்கையாக மன்றத் தலைவர் அருட்சகோதரி மரிய தெரஸ் அவர்களின் வழிகாட்டலின் கீழ்மன்ற ஒருங்கிணைப்பாளராக திருமதி.வனிதாமணி மற்றும் பொறுப்பாளராக திருமதி.

சாந்தி அவர்களையும் கொண்டு ஜூன் மாதம் 15 -ஆம் தேதி 2026 அன்று அதிகாரப்பூர்வ மற்ற சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

இலக்கிய மன்ற கூட்டம் சிவசக்தி 10ஆம் வகுப்பு இ பிரிவு மாணவரின் இறை வழிபாட்டுடன் துவங்கியது. தொடர்ந்து திருமதி .வனிதாமணி அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.

மன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து மன்றத்தின் செயலாளராக செல்வன் .சிவசக்தி ( பத்தாம் வகுப்பு இ பிரிவு ) அவர்களை ஒரு மனதாக தேர்ந்தெடுத்தனர்.



நிகழ்ச்சியின் தொடர்ச்சியாக மன்ற ஒருங்கிணைப்பாளர் திருமதி சாந்தி அவர்கள் 2026-27 - ஆம் ஆண்டு நடைமுறை திட்டங்களான.

"உரை முழக்கம் செழிக்க செய்வீர்" என்ற மன்றத்திற்கான கருப்பொருளை அறிவித்தார்.

தமிழ் இலக்கிய மன்றத்தின் நோக்கம் மற்றும் திட்டங்களை செயல்படுத்துவதற்கான கலந்துரையாடலையும் மேற்கொண்டனர்.





கலந்துரையாடலின் அடிப்படையில் பல்வேறு நடவடிக்கைகள் மற்றும் செயல்பாடுகள் முடிவெடுக்கப்பட்டன.

| வ.எண் | மாதம் | செயல்பாடுகள் |
|---|---|---|
| 1 | ஜூலை | புதிய சொற்களை உருவாக்கும் வார்த்தை விளையாட்டு |
| 2 | ஆகஸ்ட் | நா பிறழ் சொற்றொடர்கள் |
| 3 | அக்டோபர் | திருக்குறள் ஒப்புவித்தல் மற்றும் கதைகள் கூறுதல் |
| 4 | நவம்பர் | பட்டிமன்றம் |
| 5 | டிசம்பர் | பேச்சுப்போட்டி |
| 6 | ஜனவரி | சிறுமலர் தயாரித்தல் |
| 7 | பிப்ரவரி | காலை வழிபாட்டுக் கூட்டம் |

மொழிப் புலமையையும், ஆளுமையையும் உருவாக்கி அகிலம் போற்ற வாழ செய்யும் அற்புதமாகும்.

இறுதியாக புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றச் செயலாளர் செல்வன். சிவசக்தி அவர்களின் நன்றி உரையுடன் அதிகாரப்பூர்வமற்ற சந்திப்பு இனிதே நிறைவு பெற்றது.

சிவசக்தி.ம

செயலாளர்கையொப்பம்

ஒருங்கிணைப்பாளர் கையொப்பம்

முதல்வர் கையொப்பம்

சிறப்பு விருந்தினர் கையொப்பம்